Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC . NO.304 /2020      Date: 12.07.2022
Deposition of witness for prosecution: PW1 (LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | மோகனசுந்தர் | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 12.07.2022

**முதல் விசாரணை:**

நான் தற்போது அனுமந்தன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 09.01.2020ம் தேதி காலை 9.00 மணியளவில் தர்பார் படம் பார்க்க நான், எனது அண்ணன், அண்ணன் நண்பர் ஆகியோர் அனுமந்தன்பட்டியிலிருந்து கம்பத்தில் உள்ள யுவராஜா தியேட்டருக்கு டிஎன் 60 ஏஒய் 0965 என்ற பதிவு எண் கொண்ட பைக்கில் சென்று கொண்டிருந்தோம். அப்போது யூனியன் ஸ்டீல்ஸ் அருகே செல்லும்போது எதிர் திசையில் வந்த இருசக்கர வாகனத்தில் நாசர் அலி என்பவர் டிஎன் 59 பிஜே 5799 என்ற பதிவு எண் கொண்ட ஆர் 1 பைக்கில் வந்து எங்கள் மீது மோதிவிட்டார். மோதியதில் எனக்கு சிறுகாயமும், என் அண்ணனுக்கு சிறு காயமும் ஏற்பட்டது, நடுவில் அமர்ந்திருந்த சுந்தர் என்பவருக்கு தலையில் அடிப்பட்டு சிரியஸ்சாக இருந்தது.

பின்னர் கம்பம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம், அங்கிருந்து மேல் சிகிச்சைக்கா க.விலக்கு மருத்துவமனைக்கும், அதன் பின்னர் மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். 12.01.2020ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். நா்ன காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டபடும் புகார் நா்ன கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி நபர் நாசர் அலி ஆஜர் எதிரிதான். எதிரி அஜக்கிரதையாக வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி ஆஜர், வழக்கஞர் ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN
Digitally signed by A RAMANATHAN
Date: 2022.07.12 19:02:18 +0530

நீதித்துறை நடுவர், உத்தமபாளையம்

.